
# பிரிக்பீல்ட்ஸ் வட்டாரத்தில் உணவகங்களின் நடை பாதை

# மேஜை நாற்காலிகள் அகற்றம்

கோலாலம்பூர், மே 10-

பிரிக்பீல்ட்ஸ் ஜாலான் துன் சம்பந்தன் மற்றும் தம்பி பிள்ளை வட்டாரத்தில் பாதசாரிகள் நடப்பதற்கு தடையாக விளங்கிய உணவகங்களின் மேஜை நாற்காலிகளை மாநகர மன்றம் நேற்று அப்புறப்படுத்தியது.

மொத்தம் 8 இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கு வாடிக்கையாளர்களுக்கு வைக்கப்பட்டிருந்த மேஜை



பக்கம் 15

## முதல் பக்கத் தொடர்ச்சி

## பிரிக்பீல்ட்ஸ் வட்டாரத்தில்...

நாற்காலிகளை அதிகாரிகள் அப்புறப்படுத்தியதாக அந்த அறிக்கை தெரிவித்தது.

மக்கள் நடமாட முடியாதபடி வழியை மறிக்கும் வகையில் அந்த நாற்காலி மேஜைகள் போடப்பட்டிருந்தன. தொடர்ந்து இந்த இடங்கள் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர மன்றம் தெரிவித்தது.